International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்க மகளிர் பாடல்களில் வாழ்வியல்

**முனைவர் இரா. ஜானகி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பன்முகக்கலை மற்றும் வணிகவியல் நிறுவனம், SRMIST
வடபழனி வளாகம்

**சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழர் நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல், தொழில்நுட்ப அறிவு, வாழ்வியல் ஆகியவற்றின் வரலாற்றுக் களஞ்சியமாக விளங்குகின்றன.சங்கப் பெண்புலவர்களின் பாடல்கள், பெண்களின் அகஉணர்வுகளை மட்டுமன்றி, அக்கால சமூகத்தின் வாழ்வியல், தொழில்முறை அறிவு, இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை, சமூகப் பொறுப்பு மற்றும் பண்பாட்டு விழுமியங்களைப் பதிவு செய்துள்ளன. இவ்வாய்வு, சங்க மகளிர் பாடல்களில் இடம்பெறும் வாழ்வியல் கூறுகளை ஆராய்வதோடு, அவற்றின் வழியாக வெளிப்படும் தொழில்நுட்ப அறிவு, சமூக அமைப்பு, பொருளாதாரப் பின்னணி மற்றும் பெண்களின் சமூகப்பங்களிப்பை விளக்குகிறது. மேலும், சங்கப் பெண்புலவர்களின் பாடல்கள் சமூக வரலாற்றை அறிய முதன்மையான ஆதாரங்களாக அமைகின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**முதன்மைச் சொற்கள்** : சங்க இலக்கியம், பெண்புலவர்கள், வாழ்வியல், தொழில்நுட்பம், ஆடை, தச்சுக்கலை, சமூக வரலாறு.

**முன்னுரை**

செவ்வியல் தமிழ் இலக்கியங்களில் பழந்தமிழர்களின் நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், மக்களின் வாழ்வியல் முதலானவற்றை ஐந்திணைப் பின்புலத்தில் எடுத்துக்காட்டுவன சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்களின் பாடுபொருளான அகம், புறம் முதலியவற்றை பாடிய கவிஞர்களின் எண்ணிக்கையாக 473 என அறிகிறோம். மங்கல மகளிர், மெல்லியன் மகளிர், சேயிழை மகளிர், வசையில் மகளிர், மனையோள், வெய்யோள் என்றெல்லாம் சிறப்பான அடைமொழிகளில் புலவர்களால் சுட்டப்படும் சங்க இலக்கியப் பாடல்களை பாடிய பெண் கவிஞர்கள் பலர் உள்ளனர். சங்கப்பெண் கவிஞர்களின் எண்ணிக்கை குறித்து ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. 38 என உ.வே.சா.வும், 30 என எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களும், 34 என அவ்வை துரைசாமிபிள்ளை அவர்களும், 27 என கா.கோவிந்தன் அவர்களும், 47 என அவ்வை நடராசன் அவர்களும், 25 என ந.சஞ்சீவி அவர்களும், 45 என தாயம்மாள் அறவாணன் அவர்களும் பெண் கவிஞர்களின் எண்ணிக்கையை எடுத்துக்காட்டுவர். அந்த வகையில் அவ்வையார், வெள்ளிவீதியார், காக்கைப்பாடினி நச்செள்ளையார், ஆதிமந்தி, காவற்பெண்டு என சங்கப்பெண் கவிஞர்களின் பட்டியல் நீண்ட வரலாறுடையது. சங்ககால மகளிரின் பாடல்களில் உலகியல்,

கல்வியறிவு, அரசியல், தொழில்மேம்பாடு, சமூக உணர்வு, வரலாறு, வாழ்வியல் என சங்கப்பெண் கவிஞர்களின் பன்முக ஆளுமைத் தன்மையை பாடல்கள் வழி அறிய முடிகின்றது. சங்கக் கவிதைகளில் மகளிர் துணிச்சலுடன் காதலையும் வீரத்தை யும் வெளிப்படையாகக் கூறியதுடன் அன்றைய சூழலில் தொழில் நுட்பத்தில் தமிழர் சமூகம் அடைந்திருந்த வளர்ச்சி நிலைகளையும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். அவர்களின் பாடல்களில் வேளாண்மை, நெசவு, ஆடைத் தயாரிப்பு, அணிகலன், தச்சுக்கலை, கட்டுமானம், கடல் வாணிபம், போர்த்தொழில்நுட்பம் போன்ற பல்வேறு வாழ்வியல் செய்திகள் பதிவாகி யுள்ளன. இத்தகைய பதிவுகள் சங்க காலச் சமூகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வகையான அணுகுமுறையின் வாயிலாகப் பழந்தமிழர் வாழ்க்கையின் பல புதிய பரிமாணங்களை வெளிக்கொணர முடியும்.

### ஆய்வுச் சிக்கல்

சங்க இலக்கியங்கள் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், சங்கப் பெண் புலவர்களின் பாடல்களை வாழ்வியல் நோக்கில் முழுமையாக ஆராய்ந்த ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக அவர்கள் பதிவு செய்துள்ள தொழில்நுட்ப அறிவு, தொழில் அமைப்பு, பொருளாதார வாழ்க்கை, பெண்களின் சமூகப் பங்களிப்பு போன்ற கூறுகள் தனித்த ஆய்வுப் பொருளாக போதிய அளவில் விளக்கப்பட வில்லை. எனவே, சங்க மகளிர் பாடல்களில் பதிவாகியுள்ள வாழ்வியல் செய்திகள் எவ்வாறு பழந்தமிழர் சமூகத்தின் நாகரிக வளர்ச்சியை எடுத்துரைக்கின்றன என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வின் மையச் சிக்கலாக அமைகிறது.

### ஆய்வின் நோக்கங்கள்

சங்க மகளிர் பாடல்கள் பற்றிய இந்த ஆய்வு பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

* சங்க மகளிர் பாடல்களில் இடம்பெறும் வாழ்வியல் கூறுகளை அடையாளம் காணுதல்.
* பெண்புலவர்கள் பதிவு செய்துள்ள தொழில்நுட்ப அறிவினை விளக்குதல்.
* பழந்தமிழர் சமூகத்தின் தொழில், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றை ஆராய்தல்.
* சங்க மகளிரின் சமூகப் பங்களிப்பை வெளிப்படுத்துதல்.
* சங்க இலக்கியங்களை சமூக வரலாற்று ஆவணமாக மீள்பார்வை செய்தல்.

### முந்தைய ஆய்வுகள்

சங்க மகளிர் குறித்த ஆய்வுகளில் ந. சஞ்சீவி, சா.வையாபுரிப்பிள்ளை, தாயம்மாள் அறவாணன், ரா.இராகவையங்கார் உள்ளிட்ட ஆய்வாளர்கள் பெண் புலவர்களின் எண்ணிக்கை, இலக்கியப் பங்களிப்பு மற்றும் சமூகப் பின்னணி குறித்து குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். ஆ. மணவழகன் சங்க இலக்கியத்தில் மேலாண்மை மற்றும் சமூக அமைப்பைப் பற்றிய புதிய கோணங்களை முன்வைத்து ள்ளார். மேலும் சங்க இலக்கியங்களில் வாழ்வியல், பொருளாதாரம், சுற்றுச்சூழல், அரசியல் போன்ற கூறுகள் பல்வேறு ஆய்வு களில் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் சங்கப் பெண்புலவர்களின் பாடல்களை மட்டும் மையமாகக் கொண்டு தொழில் நுட்பம், உற்பத்தி, கைவினை, கட்டுமானம், ஆடை, அணிகலன், தொழில் அமைப்பு போன்ற வாழ்வியல் கூறுகளை ஒருங்கிணைத்து ஆராய்ந்த ஆய்வுகள் மிகக் குறைவு. அந்த ஆய்வு இடைவெளியை நிரப்பும் முயற்சியாக இவ்வாய்வு அமைகிறது.

### ஆய்வுமுறை

இவ்வாய்வு விளக்கவியல் (Descriptive Method), பகுப்பாய்வு முறை (Analytical Method) மற்றும் வரலாற்று ஆய்வுமுறை (Historical Method) ஆகிய அணுகுமுறை களைப் பின்பற்றுகிறது. எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்ற பெண்புலவர்களின் பாடல்கள் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. தொடர்புடைய ஆய்வு நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாடல்களில் இடம்பெறும் வாழ்வியல் செய்தி கள் பொருண்மையடிப்படையில் வகைப் படுத்தப்பட்டு ஒப்பாய்வு முறையில் விளக்கப் பட்டுள்ளன.

### பருத்திப் பெண்டிரும் பாலாவி ஆடையும்:

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவு, உடை, உறைவிடம் ஆகியவை இன்றியமையாதவையாகக் கருதப்படுகின் றன. இவற்றுள் ஆடை என்பது சமூக அடையாளம், பொருளாதார நிலை, தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் பண்பாட்டு நாகரிகத் தின் வெளிப்பாடாகவும் விளங்குகிறது. சங்க காலத் தமிழர்களின் ஆடை நாகரிகத்தைப் பற்றிய செய்திகள் பல சங்க இலக்கியங் களில் காணப்படுகின்றன. குறிப்பாக, சங்கப் பெண்புலவர்களின் பாடல்கள் பெண்களின் உடை அணியும் முறை, ஆடைத் தயாரிப்பு, நெசவுத் தொழில், ஆடையின் அழகியல் மற்றும் அதன் சமூகப் பயன்பாடு ஆகிய வற்றை நுட்பமாக எடுத்துரைக்கின்றன. பழந்தமிழர்கள் பருத்தி பயிர் செய்வது, பஞ்சினை சுத்தம் செய்வது, பாவோட்டுதல், ஆடை நெய்வது மற்றும் விற்பது முதலிய செயல்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளனர். அறுவை, கலிங்கம் என்னும் பெயர்களில் ஆடைகள் குறிப்பிடப்பட்டும் பருத்தி,பட்டு, ரோமம் முதலியன கொண்டும் நெய்யப்பட்ட ஆடைகளை பழந்தமிழர்கள் பயன்படுத்தி யுள்ளனர். ஆடைகள் பாலாவி, மூங்கில் தோல், பாம்புரி, எண்ணெய் நுரை ஆகியன போல இருந்தன என்பதையும் மகளிர் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. வெண்மையும் நுண்மையும் கொண்ட பூவேலை புனைந்த இழை தெரியாமல் நெய்யப்பட்ட ஆடைகளை பெண்கள் அணிந்திருந்தனர் என்பதையும் வெள்ளை யான ஆம்பல் மலரின் அழகிய நெளிவை யுடைய தழையுடையை மெல்லிதாய் அகன்ற அல்குகளில் அழகுப்பெற மகளிர் அணிந்திருந்தனர் என்பதையும் சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது.

**பாம்பு உரி அன்ன வடிவின காம்பின்**

**கழைபடு சொலியின் இழையணிவாரா**

**ஒண்பூங் கலிங்கம்** (புறம்.383, மாறோக்கத்து நப்பசலையார்)

**ஆம்பல் உருவ நெறித்தழை**

**ஐதுஅகல் அல்குல் அணிபெறத் தைஇ**
(நற்றிணை, 390, ஔவையார்)

**புலைத்தியின் செயல்பாடு**

சங்க காலத் தமிழர் சமூகத்தில் ஆடை உற்பத்தி ஒரு முக்கியத் தொழிலாக இருந்தது போல, அதன் பராமரிப்பும் தனித் தொழிலாக வளர்ச்சி பெற்றிருந்தது. ஆடை களை வெளுக்குதல், தூய்மைப் படுத்துதல், பசையிடுதல், உலர்த்துதல், மடித்தல் போன்ற பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில் முறையாக நடைபெற்றுள்ளன. பண்டைத் தமிழர் ஆடையை உற்பத்தி செய்வதில் சிறந்து விளங்கியது மட்டுமின்றி ஆடை பராமரிப்புத் தொழிலிலும் சிறப்பான முறை களைக் கையாண்டுள்ளனர். உடை பராமரிப்புத் தொழிலில் ஈடுபட்டோரை காழிகர் (அகம்.89) என்றும் உடை வெளுக் கும் தொழிலில் ஈடுப்பட்ட மகளிரை புலத்தியர் என்றும் அழைத்துள்ளனர்(புறம். 311). புலத்தியர் துணி வெளுக்கின்ற இடம் துறை எனப்பட்டுள்ளது (கலி.72). துணி வெளுக்கும் புலைத்தி தான் உண்ட இரவு உணவில் எஞ்சிய கஞ்சியை துணிகளுக்குப் பசையாகப் போட்டு துணிகளை உலர்த்தியச் செய்தியை அஞ்சில் அஞ்சியார் பாடல் வழி அறிய முடிகின்றது.

**புலைத்தி எல்லித் தோய்த்த**

**புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு**
(நற்றிணை.90)

இப்பாடலில் எல்லித் தோய்த்த என்ற சொற்றொடர் ஆடைகளை இரவிலேயே ஊற வைத்து மறுநாள் சுத்தப்படுத்தும் முறையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். புகாப்புகர் கொண்ட என்பது துணியை வெளுக்கப் பயன் படுத்தப்பட்ட பாரம்பரிய செயல் முறைகளை உணர்த்துகிறது. இதன் மூலம் சங்க காலத்தில் துணி பராமரிப்பிற்கென தனித்த தொழில்நுட்ப அறிவு நிலவியதை அறியலாம்.

கட்டுரையின் மூலப்பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளபடி, புலைத்தி தாம் உண்ட உணவில் எஞ்சிய கஞ்சியை துணிகளுக்குப் பசையாகப் பயன்படுத்தியதாகச் சொல்லப் படுகிறது. இது கழிவுப் பொருள்களை மறுபயன்பாடு(Reuse) வாழ்க்கை முறையை யும், வளங்களைச் சிக்கனமாகப் பயன் படுத்தும் சுற்றுச்சூழல் சார்ந்த சிந்தனையை யும் வெளிப்படுத்துகிறது. இத்தகைய நடை முறைகள் இன்று பேசப்படும் நிலைத்த வளர்ச்சி (Sustainable Development) என்ற கருத்துடன் ஒப்பிடத்தக்கவை.

ஆடை உற்பத்தியைப் பற்றிய முந்தைய பகுதியில் நெசவுத் தொழிலின் வளர்ச்சி

எடுத்துரைக்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து புலைத்தியின் செயல்பாடு, உற்பத்திக்குப் பிந்தைய பராமரிப்பு முறைகளையும் வெளிப் படுத்துகிறது. இதன் மூலம் சங்க காலத்தில் உற்பத்தி - பயன்பாடு - பராமரிப்பு என்ற முழுமையான பொருளாதாரச் சங்கிலி (Production-Use-Maintenance Cycle)இருந்தது என்பதை இலக்கியச் சான்றுகள் உறுதிப் படுத்துகின்றன.

**வானுற ஓங்கிய புரிசை**

சங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் வாழ்க்கை முறையை மட்டுமல்லாது, அவர்களின் கட்டுமானத் திறன், பாதுகாப்புப் பொறியியல் மற்றும் நகரமைப்புத் தொழில் நுட்பத்தையும் தெளிவாக எடுத்துரைக்கின் றன. குறிப்பாக, பெண்புலவர்களின் பாடல் களில் கோட்டை, மதில், அகழி, வாயில், எந்திரம் போன்ற கூறுகள் இடம்பெறுவது, அக்காலத்தில் கட்டிடக்கலை அறிவு உயர்ந்த நிலையில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது. சங்க கால அரசர்கள் தங்கள் நாடுகளின் பாதுகாப்பிற்காக பல அடுக்குகளைக் கொண்ட அரண்மனைகள், உயரமான மதில்கள், அகழிகள் மற்றும் பாதுகாப்பு எந்திரங்களை அமைத்திருந்தனர். இவை போர்க்காலத் தேவைகளுக்காக மட்டுமல் லாமல், அரசின் நிர்வாக வலிமை மற்றும் பொருளாதார வளத்தின் அடையாளங் களாகவும் விளங்கின.

சங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் பொறியியல் தொழில் நுட்பங்களை வேளாண்மை, பாதுகாப்பு, கட்டுமானம், கைவினைப்பொருட்கள் உற்பத்தி போன்ற பல நிலைகளில் காணலாம். குறிப்பாக கட்டு மானத்துறையில் பகைவர்களிட மிருந்து அரண்மனைக் கோட்டைகளை பாதுகாக்க அம்பு எய்யப்படும் பல எந்திரப் பொறி களையும் கொலைவல்ல முதலைகளை யுடைய ஆழ்ந்த குண்டு கண் அகழியையும் மதில்களில் அமைத்துள்ளனர் என்பதை காக்கைப்பாடினியார் நச்செள்ளயார் பாடல் வழி அறிய முடிகின்றது.

**எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்**

**கோள்வல் முதலைய குண்டு கண் அகழி**

**வானுற ஓங்கிய வளைந்து செய்புரிசை**
(பதிற்றுப்பத்து, ஆறாம்பத்து, 53)

**தச்சுக்கலையும் பயன்பாட்டுப் பொருட்களும்**

சங்க காலத்தில் தச்சுக்கலை மிகவும் மேம்பட்ட கைவினைக் கலையாக இருந்தது. வீடுகள், மாளிகைகள், தேர்கள், வண்டிகள், படகுகள், கப்பல்கள், கதவுகள், கட்டில்கள், மரப்பொருட்கள் போன்ற அனைத்தும் திறமையான தச்சர்களால் உருவாக்கப் பட்டன. ஔவையார் புறநானூற்றில்,

**வைகல் எண்டேர் செய்யுந் தச்சன்**

**திங்கள் வலித்த காலன் நோனே** (புறநானூறு, 87) என்று குறிப்பிடுகிறார்.

ஒரு சிறந்த தேரை உருவாக்குவதற்கு தச்சர் பல நாட்கள் உழைக்க வேண்டியிருப்பதை இவ்வடிகள் உணர்த்துகின்றன. இதன்மூலம் தச்சுத் தொழில் வெறும் உடல் உழைப்பாக அல்லாமல், அளவியல், சமநிலை, மரத் தேர்வு, இணைப்பு நுட்பம் போன்ற தொழில் நுட்ப அறிவுகளை உள்ளடக்கியிருந்தது என்பது தெளிவாகிறது.

**போக்குவரத்துத் தொழில்நுட்பம்**

சங்க இலக்கியங்களில் தேர்கள், மாட்டு வண்டிகள், கடல் கப்பல்கள், படகுகள் போன்ற பல்வேறு போக்குவரத்து சாதனங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஔவையார்,

**உமணர்... கீழ்மரத்து யாத்த சேம அச்சு அன்ன** (புறநானூறு,102) என்று குறிப்பிடுகிறார்.

வண்டிகளில் கூடுதல் அச்சு எடுத்துச் செல்லப்பட்டதாக இப்பாடல் கூறுகிறது. நீண்ட பயணங்களில் அச்சுமுறிந்தால் உடன டியாக மாற்றுவதற்காக முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இது சங்ககால மக்களின் திட்டமிடல் திறன் மற்றும் இயந்திரப் பராமரிப்பு அறிவை வெளிப்படுத்துகிறது.

இவ்வகைச் செய்திகள் தமிழர்களின் பொறியியல் சிந்தனை நடைமுறையுடன் இணைந்திருந்ததை உறுதிப்படுத்துகின்றன.

**சிறார்களின் விளையாட்டுப் பொருட்கள்**

சிறார் ஓட்டி விளையாடும் நடைவண்டியை யும் தச்சர்கள் செய்தனர் என்பதை மதுரை ஒலைக்கடையத்தார் நல்வெள்ளையார் பாடல் வழி அறியலாம்.

**தெருவில் தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்** (நற்றிணை, 250)

இந்தப் பாடலில் குழந்தைகள் சிறிய மரத்

தேர்களை உருட்டி விளையாடியதை அறிய முடிகிறது. இதன் மூலம் விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்பிலும் தச்சுக்கலை பயன்படுத்தப்பட்டதை உணர முடிகிறது.

**போர்க்கருவிகளும் உலோகத் தொழிலும்**

சங்க மகளிர் பாடல்களில் வாள், வேல், கேடயம், அம்பு போன்ற போர்க்கருவிகள் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன. பொன்முடியார்,

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே** (புறநானூறு, 312)

என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் இரும்புத் தொழில், உலோக உருக்குத் தொழில் மற்றும் ஆயுதத் தயாரிப்பு சங்க காலத்தில் நன்கு வளர்ந்திருந்ததை அறிய முடிகிறது. தொழில்பிரிவும் தொழில்முறை நிபுணத்துவமும் அக்கால சமூகத்தின் முக்கிய அம்சங்களாக இருந்துள்ளன.

**அளவியல் கருவிகளும் தொழில்நுட்ப அறிவும்**

சங்கத் தமிழர்கள் மரவேலைப்பாடுகளிலும் மட்கலங்கள் செய்வதிலும் சிறப்பாக திகழ்ந்துள்ளனர். தேர்கள், வண்டிகள் மற்றும் போர்க்கருவிகள், படகுகள் மற்றும் கப்பல்கள் கட்டுமானத்தில் தச்சு வேலைப் பாடு, வீடு மற்றும் மாளிகை முதலியவற்றின் தூண்கள் மற்றும் கதவுகள், கட்டிலின் தொழில் நுட்பம் போன்ற பல நிலைகளில் தச்சுவேலைபாடுகள் நுட்பமாகவும் சிறப்பாகவும் விளங்க மண்பாண்டக்கலை மட்கலம், அடுகலம், தாழிகள் எனப்பல வகைமைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மட்பாண்டங்கள் செய்ய சக்கரங்கள் (அச்சுடைக் சாக்காட்டு ஆரம், புறம், 256) பயன்படுத்தப்பட்டுள்ளமையும் மட்பாண்டங்கள் சூளையால் சுட்டுப் பதப்படுத்தப்பட்டு பயன்படுத்தியுள்ளமையும் அறியமுடிகின்றது. அதியமானின் வலிமையைக் கூற வந்த ஔவையார் வலிமையுடைய தேர்களை உருவாக்கும் தச்சர்களின் திறமையை பெரு உழைப்பைக் குறிப்பிடுவதுடன் வண்டியில் பெருஞ்சுமை ஏற்றிக் கொண்டு செல்லும் உப்பு வணிகர்கள் வழியில் மேடு பள்ளங்களால் வண்டிக்கு ஏதும் ஆகாமல் இருக்க சேமவச்சு உடன் கொண்டு போன செய்தியையும் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

**வைகல் எண்டேர் செய்யுந் தச்சன்**
**திங்கள் வலித்த காலன் னோனே** (புறம்.87)

**உமணர் ...கீழ்மரத்து யாத்த சேம அச்சு அன்ன** (புறம்.102)

தொழிற்படு கருவிகளுள் அளத்தல் கருவியான துலாக்கோல், மீன்வலை மற்றும் தினைப்புனத்தில் கிளிகளை விரட்ட பயன் படுத்தப்பட்ட கிளியோட்டும் கருவி முதலியன குறித்தும் சங்க மகளிர் பாடல்களில் காணலாம்.

**சிறுதினைப் படுகிளி கடீஇயர் பன்மாண்**

**குளிர்கொள் தட்டை மதன் இல புடையா**
(அகம்.32, நல்வெள்ளியார்)

**நெடுங்கயத்திட்ட மீன்வலை மாப்பட்டாஅங்**
(குறுந்தொகை,171,பூங்கண் உத்திரையார்)

**கட்டளைக்கல்லும் கைவல்கம்மியரும்:**

சங்ககாலத்தில் அணிகலன்களை செய்வதற்கு கைவல்கம்மியர்கள் இருந்தனர். (நற்றிணை. 94). பொதுவாக அணிகலன்கள் கீழைக்கடல் முத்து,பொன்,வெள்ளி,சங்கு முதலியவற்றால் செய்த அணிகளை மகளிர் தேர்வு செய்து அணிந்துள்ளனர். அணிகலன்கள் குழை (காதணி), தொடி (கையணி), தலைக்கோலம் (தலையணி), சிலம்பு (காலணி) ஆரம் (மார்பணி), வளை (தோளணி), மோசை (விரலணி), வாடாமாலை, கழல் (வீரர் காலில் அணிவர்) எனச் சங்க மகளிரால் ஆசையுடன் அணியப்பட்டிருக்கிறது. வீரம் பொருந்திய பனையின் வெள்ளிய ஓலையை அணிந்த சேரன் போர்களம் காண இரத்தத்தால் தன் நிறம் நீங்கிய பனந் தோட்டை ஊன் என்று பருந்து மயங்கி உண்ண முயன்றதை காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் தம் பாடலில் குறிப்பிட்டு உள்ளார். (பதிற்றுப்பத்து.51). பொன்னை உரைத்துப் பார்ப்பதற்கு கட்டளைக்கல் பயன் படுத்தப்பட்டுள்ளதை கச்சிப்பேட்டு நன்னாகையார் தம் பாடலில் குறிப்பிட்டு உள்ளார்.

**பொன்னின் உரைதிகழ் கட்டளை கடுப்ப**
(குறுந்தொகை.192).

இப்பாடலில் குறிப்பிடப்படும் கட்டளைக்கல் என்பது பொன்னின் தரத்தைச் சோதிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவியாகும். இதன் மூலம் சங்ககாலத்தில் உலோகங்களின் தூய்மை, தரநிலை மற்றும் மதிப்பீட்டு முறை அறிவியல் அடிப்படையில் அமைந்தி

ருந்ததை அறியலாம்.இது வெறும் வாணிபச் செயல்முறை அல்ல; தரக் கட்டுப்பாடு (Quality Control), பொருள் சோதனை (Material Testing), வணிக நம்பகத்தன்மை (Commercial Reliability) ஆகிய கருத்துகளும் அக்கால சமூகத்தில் நிலவியிருந்ததை உறுதிப்படுத்துகிறது. மேலும் வெற்றியடைந்த வேந்தனின் வீரத்தைப் பாடிய பாணனுக்கு ஒளிவீசும் நெருப்பில் இட்டுச் சேர்த்து வெள்ளிக் கம்பியால் தொடுக்கப்பட்ட பொற்றாமரை மாலையை பரிசாக கொடுத்த செய்தியை பேய்மகள் இளவெயினி குறிப்பிட்டுள்ளார்.

**ஒள்ளழல் புரிந்த தாமரை**

**வெள்ளி நாரால் பூப்பெற்றிசினே** (புறம்.11).

இப்பாடல் வெள்ளிக் கம்பிகளைப் பயன் படுத்தி பொற்றாமரை மாலை உருவாக்கப் பட்டதை எடுத்துரைக்கிறது. இது உலோக இணைப்பு (Metal Joining), நுண்கைவினை (Fine Craftsmanship) மற்றும் அழகியல் வடிவமைப்பு ஆகியவை சங்ககாலத்தில் மேம்பட்டிருந்ததை உறுதிப்படுத்துகிறது.

### ஆய்வின் புதிய பங்களிப்பு

இவ்வாய்வு சங்கமகளிர் பாடல்களை வெறும் இலக்கியக் கண்ணோட்டத்தில் அணுகாமல், வாழ்வியல், தொழில்நுட்ப வரலாறு, சமூகப் பொருளாதாரம் மற்றும் பெண்ணிய வரலாறு ஆகிய நான்கு பரிமாணங்களின் அடிப்படை யில் ஒருங்கிணைத்து ஆராய்கிறது. குறிப்பாக, சங்கப் பெண்புலவர்கள் தொழில்நுட்ப வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளனர் என்பதை நிறுவுகிறது. பெண்கள் உற்பத்தி மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளில் வகித்த பங்கை எடுத்துக்காட்டுகிறது.சங்க இலக்கியங்களை சமூக வரலாற்று ஆவணங் களாக மறுவாசிப்பு செய்கிறது. தொழில்நுட்ப வரலாறு மற்றும் வாழ்வியல் ஆய்வுக்கான புதிய அணுகுமுறையை முன்வைக்கிறது. எனவே, இவ்வாய்வு சங்க மகளிர் பாடல் களைப் புதிய கோணத்தில் வாசிப்பதற்கான ஆய்வியல் அடித்தளத்தை உருவாக்குகிறது.

### முடிவுரை

சங்க மகளிர் பாடல்கள் காதல், குடும்பம், வீரம் போன்ற இலக்கியப் பொருண்மைகளை மட்டும் எடுத்துரைப்பவை அல்ல. அவை பழந்தமிழர் சமூகத்தின் வாழ்வியல், தொழில் நுட்ப அறிவு, தொழில் அமைப்பு, கட்டுமானத் திறன், உலோக அறிவியல், வாணிபம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் அறிவு மற்றும் பண்பாட்டு மரபுகளைப் பதிவு செய்துள்ள சமூக வரலாற்று ஆவணங்களாக விளங்கு கின்றன. ஆடை உற்பத்தி, நெசவுத் தொழில், புலைத்தியரின் சேவை, கட்டுமானப் பொறியி யல், தச்சுக்கலை, உலோகத் தொழில், அணிகலன் தயாரிப்பு போன்ற துறை களில் பெண்களின் பங்களிப்பை சங்கப் பெண் புலவர்கள் இயல்பான வாழ்வியல் நிகழ்வு களின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

### துணைநூற்பட்டியல்


- அறவாணன், தாயம்மாள். மகடூஉ முன்னிலை: பெண் புலவர் களஞ்சியம். தமிழ்க்கோட்டம், 2011.
- மணவழகன், ஆ. சங்க இலக்கியத்தில் மேலாண்மை. காவ்யா பதிப்பகம், 2009.
- முருகேசபாண்டியன், ந. அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில். காலச்சுவடு, 2008.
- சஞ்சீவி, ந. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை. சென்னைப்பல்கலைக் கழகம், 1973.
- வையாபுரிப்பிள்ளை, சா. சங்க இலக்கியம்: பாட்டும் தொகையும் – 1. பாரி நிலையம், 1967.
- இராகவையங்கார்,ரா.நல்லிசைப் புலமை மெல்லியலார்கள். தமிழ்க்கூடல் ஆபீஸ், 1933.
- வேங்கசாமி நாட்டார், ந.மு.,அகநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், 2019
- புலியூர்க் கேசிகன்,புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், 2006
- ஔவை துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, சாரதா பதிப்பகம், 2003
- புலியூர்க் கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், 1996